Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 44

செவ்வாய்க்கிழமை
09 ஜனவரி 2024

மார்கழி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

**முச்சந்தி முரளி**



"விகாரையைப் பெரிசாக்கிறதுக்குத்தான் ஆள் இஞ்சாலிப்பக்கம் எட்டிப் பார்த்திருக்கு போல"

## வடக்கில் முதன்முறையாக

# 48 கிலோ அபின் போதை கற்கோவளத்தில் மீட்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 9**

**வடக்கு மாகாணத்தில் முதல்முறையாக பெருமளவிலான உயிர்கொல்லி அபின் மற்றும் கேரளக் கஞ்சா என்பன கற்கோவளம் கடற்கரையில் நேற்று மீட்கப்பட்டுள்ளன.**

11



## 84 கிலோ கஞ்சா நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 9

பருத்தித்துறை - வல்லிபுரம் காட்டுப் பகுதியில் 84 கிலோகிராம் நிறையுடைய உயிர் 11

## நயினாதீவு விகாரையை மேலும் விரிவுபடுத்துவோம்

### வடக்குப் பயணத்தை முடித்தகையோடு கொழும்பில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 9

நயினாதீவில் அமைந்துள்ள விகாரையை மையமாகக் கொண்ட சமய நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு 11



### சுதந்திரநாள் கரிநாள்

## பேரணியில் கலந்துகொண்ட பிரதிவாதிகளுக்கு விடுதலை

### வழக்கும் கிடப்பில்

யாழ்ப்பாணம், ஜன. 9

'வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி' என்ற தொனிப்பொருளில் சுதந்திரதினத்தை கரிநாளாக அறிவித்து, பல்கலைக் 11

## அராஜகத்தை கண்டித்து முல்லையில் போராட்டம்

முல்லைத்தீவு, ஜன. 9

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீதான பொலிஸாரின் அடாவடித்தனத்தை கண்டித்தும், வவுனியா மாவட்டச் சங்கத் தலைவி விடுதலை செய்யப்படவேண்டும் 11

## நாடாளுமன்று இடைநிறுத்தம்

கொடிகாமம், ஜன. 9

நாடாளுமன்றம் இன்று கூடவுள்ள நிலையில், இவ்வார கூட்டத்தொடர் முடி 11

## 5 லட்சம் பேர் வரி ஏய்ப்பு

கொழும்பு, ஜன. 9

நாட்டில் வருமான வரி செலுத்தக்கூடியவர்கள் 10 இலட்சம் பேர் இருந்தும், 5 11

## அரசியல் கைதிகள் இருவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு அரசியல் கைதிகள் 11

## மின்தாக்கி இளைஞன் சாவு!

கிளிநொச்சி, ஜன. 9

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாத பெருமாள் ஆலயத் தேர்த்திருப்பணி வேலையில் ஈடுபட்டுக் 11

## பாம்பு தீண்டியதில் ஒருவர் உயிரிழப்பு

கொடிகாமம், ஜன. 9

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த குடும்பத் தலைவர் பாம்பு தீண்டிலுக்கு 11



றைனோ சிமென்ட் ரூப்பிங் ஷீட்

சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை

ரூ. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115748728

• இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை

RHINO 60 YEARS
www.rhino.lk

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியின் முதலாவது குருமகன்

# அருட்தந்தை அலன் நிர்மலதாஸின் குருத்துவ வெள்ளிவிழா இன்று!



அருட்தந்தை அலன் நிர்மலதாஸின் குருத்துவ வெள்ளிவிழா இன்று கொண்டாடப்படுகின்றது. கிளிநொச்சி ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

1987ஆம் ஆண்டு குருத்துவக் கல்வியின் அடித்தளமான யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்தில் காலடியெடுத்து வைத்த அருட்தந்தை அலன் நிர்மலதாஸ், தனது ஆரம்பப் பயிற்சிகளை முடித்துக்கொண்டு இந்தியாவிலுள்ள செபமாலைத்தாசர் நவதுறவு இல்லத்தில் தனது நவதுறவுப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டு 1991ஆம் ஆண்டு தனது முதலாவது அர்ப்பணத்தைச் செய்துகொண்டார்.

தொடர்ந்து தனது மெய்யியல், இறையியல் கல்வியில் தேர்ச்சிபெற்று திருச்சி பிரான்ஸிஸ்கன் இறையியல் இல்லத்தில் தனது குருத்துவப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். துறவு வாழ்வில் நித்திய அர்ப்பணத்தைப் பெற்றுக்கொண்ட அவர், 1999ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி அக்காலத்தில் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயராக இருந்த இராஜப்பு ஜோசேப் ஆண்டகையால் குருத்துவ அபிஷேகம் செய்யப்பட்டார்.

செபமாலைத்தாசர் சபையின் ஆச்சிரமங்களிலும், நாடெங்கிலும் உள்ள பல்வேறுபட்ட ஆச்சிரமங்களிலும் அதிபர் உள்ளிட்ட பெரும்பொறுப்புகளை ஆற்றியுள்ள அருட்தந்தை அலன் நிர்மலதாஸ், தற்போது அச்சுவேலி தோலகட்டி ஆச்சிரமத்தில் அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்.

அருட்தந்தை அலன் நிர்மலதாஸ் அடிகளாரின் குருத்துவப்பணி, யூபிலி ஆண்டையும் தாண்டி பல்லாண்டுகாலம் நீடித்து தமிழச் சமூகத்துக்கும் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் பயனுள்ளதாக அமையவேண்டும் என்று கத்தோலிக்க மக்கள் இன்று இறையாசீர்மிக்க வாழ்த்துகளைத் தெரிவித்து நிற்கின்றனர்.

## மணல் அகழ்வு இருவர் கைது!

கிளிநொச்சி, ஜன.9

கிளிநொச்சி பூநகரியில் சட்டவிரோத மணலகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மணலகழ்வுக்குப் பயன்படுத்திய வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

கடந்த சனிக்கிழமை கிடைத்த இரகசியத் தகவலின்படி கிளிநொச்சி குற்றத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது. மேலதிக சட்டநடவடிக்கைக்காக சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் பூநகரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ச-13)



# பதில் பொலிஸ்மா அதிபருக்கு திடீரெனக் கிடைத்ததா சக்தி?

## கேள்வி எழுப்புகின்றார் பொன்சேகா

**கொழும்பு, ஜன.9**

**'யுக்திய' தேடுதல் நடவடிக்கைமூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறு கிடைக்குமா என்பது சந்தேகமே என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

"யுக்திய நடவடிக்கைமூலம் நெத்தலி மீன்களே பிடிபடுகின்றன. சுறாக்கள் இன்னும் சிக்கவில்லை. அதேபோல ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்னர் குற்றம் இழைத்தவர்களும் கைது செய்யப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கை தொடர்பில் பெரிய விம்பத்தை பதில் பொலிஸ்மா அதிபர் தோற்றுவித்துள்ளார். அவர் இதற்கு முன்னரும் மேல்மாகாணத்துக்குப் பொறுப்பாக இருந்தார். அந்த மாகாணத்தில்தான் அதிக போதைப்பொருள் குற்றச் செயல்கள் இடம்பெற்றன. தற்போது அவருக்கு திடீரென எங்கிருந்து சக்தி வந்தது? - என்றும் அவர் தெரிவித்தார். (எ-44)

## விளக்கமறியல் நீடிப்பு

வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றாவின் விளக்கமறியல் எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியாவுக்குச் சென்றபோது, எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி உட்பட இருவர் வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது சங்கத்தின் தலைவி நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், மற்றைய பெண்ணுக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சங்கத்தின் தலைவிக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (எ-இ-110)



## டெங்கு ஒழிப்பு

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை மற்றும் மூளாய் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் நேற்றுத் திங்கட்கிழமை கிராம சேவகர் ந.சிவரூபன் தலைமையில் கிராமமட்ட டெங்கு ஒழிப்பு நடைபெற்றது. மக்களின் ஒத்துழைப்புடன் வீடுகள் தரிசிக்கப்பட்டுப் பொது மக்களுக்கு டெங்கு நோய்த் தாக்கம் தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. (எ-66)



## வீடு புகுந்து தாக்குதல்; சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜன.9

சங்குவேலியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை வீடொன்று மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், அன்றையதினம் மதியமே இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

சங்குவேலியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் அத்துமீறி உள்நுழைந்த நபர்கள் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளைத் தீக்கிரையாக்கியதுடன் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துச் சேதப்படுத்தினார்கள். இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-125)

## நீச்சல் போட்டி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டுக் காரைநகர் பிரதேச இளைஞர்களுக்கிடையிலான நீச்சல் போட்டி காரைநகர் பிரதேச சபையால் காரைநகர் கசூரினாக் கடற்கரையில் நடத்தப்படவுள்ளது.

போட்டிக்கான பதிவுகளை **0776910138, 0212251735** ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ள முடியும் என்று காரைநகர் பிரதேசசபை அறிவித்துள்ளது. (எ-66)

# ரணிலின் வருகையால் எந்தப் பயனும் இல்லை

## செல்வம் எம்.பி. அதிருப்தி

வவுனியா, ஜன.9

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குப்பயணத்தால்எந்தப்பயனுமில்லை. இது ஒரு சம்பிரதாய நிகழ்வுதான் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி வவுனியாவுக்கு வந்திருந்தார். அப்போது நிலஅபகரிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நாம் அவருடன் பேசியிருந்தோம். இந்தப்பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு கிடைக்கும் என்று நம்பியிருந்தோம். ஆனால் நாம் கூறிய விடயங்களுக்கு அவர் சரியான பதிலைத் தரவில்லை. அது ஒரு சம்பிரதாயபூர்வ கூட்டமாகவே இருந்தது - என்றார். (எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் வடக்குப் பயணம் பணத்தை வீணடித்த செயல்



## சாடுகின்றது ஜே.வி.பி.

**யாழ்ப்பாணம், ஜன.9**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குப் பயணம், மக்களின் வரிப்பணத்தை வீணடித்த வெற்றுப் பயணம் என்று தெரிவித்துள்ளார் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் ரட்ணாயக்கா.**

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்கள் இன்னமும் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே வாழ்கின்றனர். காணி விடுவிப்பு, மீள் கட்டுமானம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு மற்றும் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு எனப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். வடக்குக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க ஒரு துண்டுக் காணியையேனும் மக்களுக்கு விடுவிக்கவில்லை. பொருளாதார ரீதியில் பின்னோக்கிச் செல்லும்போது, ஜனாதிபதி ஆடம்பரமாக வாகனத் தொடரணிகள் சகிதம் வந்து 4 நாள்கள் வடக்கில் முகாமிட்டது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவல்ல. இது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரையே - என்றார். (எ-27)

**ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்**

தியாகராஜா பரமேஸ்வரன்
சின்னாலடி,
காரைநகர்.
- வழக்காளி

வழ. இல. நானாவிதம்/149/2023

எதிர் -

1. **பேரம்பலம் நாகரத்தினம்**
தலைவர்
மாணிக்கவாசகர் மடாலய
அன்னதான சபை
காரைநகர் சிவன் கோவில்
(ஈழத்துச் சிதம்பரம்)
காரைநகர்

2. **செல்லையா கந்தசாமி**
செயலாளர்
மாணிக்கவாசகர் மடாலய
அன்னதான சபை
காரைநகர் சிவன் கோவில்
(ஈழத்துச் சிதம்பரம்)
காரைநகர்

3. **கனகசபை சிவநேசன்**
பொருளாளர்
மாணிக்கவாசகர் மடாலய
அன்னதான சபை
காரைநகர் சிவன் கோவில்
(ஈழத்துச் சிதம்பரம்)
காரைநகர்
- எதிராளிகள்

**மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியால்**

1. இரண்டாம் எதிராளியால் 10.12.2023 அன்று கூட்டப்பட்டுள்ள மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்த பொதுக் கூட்டமானது சட்ட வலிதற்றது என்ற பிரகடனத்திற்கும் தீர்ப்பிற்கும்.
2. வழக்காளி மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் உறுப்பினர் என்ற வகையில் அதன் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள உரித்துடையவர் என்ற பிரகடனத்திறகும் தீர்ப்பிற்கும்.
3. மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்த பொதுக் கூட்டத்திலேயே நிர்வாக சபை / நிறைவேற்றுக் குழு / ஆட்சிக்குழு தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற பிரகடனத்திற்கும் தீர்ப்பிற்கும்.
4. இரண்டாம் எதிராளியால் 10.12.2023 அன்று கூட்டப்பட்டுள்ள மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் நிர்வாக சபை நிறைவேற்றுக்குழு / ஆட்சிக்குழு தெரிவு செய்யப்படின் அந் நிர்வாக சபை நிறைவேற்றுக் குழு / ஆட்சிக்குழு சட்ட வலிதற்றது என்ற பிரகடனத்திற்கும் தீர்ப்பிற்கும்.
5. இரண்டாம் எதிராளியால் 10.12.2023 அன்று கூட்டப்பட்டுள்ள மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்த பொதுக் கூட்டமானது சட்ட வலிதற்றதாகையால் அக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் சட்ட வலிதற்றவை என்ற பிரகடனத்திற்கும் தீர்ப்பிற்கும்.
6. இரண்டாம் எதிராளியால் 10.12.2023 அன்று கூட்டப்பட்டுள்ள மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் நிர்வாக சபை / நிறைவேற்றுக் குழு / ஆட்சிக்குழு தெரிவு செய்யப்படின் அந் நிர்வாக சபை / நிறைவேற்றுக் குழு/ ஆட்சிக்குழுவின் செயற்பாடுகளை இடைநிறுத்தி வைக்கும் இடைக்காலத் தடைக்கட்டளையாக்கும்.

உள்ளிட்ட நிவாரணங்களைக் கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே இவ்வழக்கானது 2024.01.22 ஆம் திகதி மதியம் 01.00 மணிக்கு அழைக்கப்பட இருக்கிறதென்றும் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை தொடர்பில் அக்கறையுள்ள நபர் / நபர்கள் எவராவது இருப்பின் 2024.01.22 ஆம் திகதியன்று மதியம் 01 மணிக்கு தனிப்பட்ட ரீதியில் அல்லது சட்டத்தரணி ஊடாக கௌரவ மன்றில் தோன்றலாம் எனவும் இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

நீதிமன்றின் கட்டளைப்படி,
2024 ஆம் ஆண்டு தை மாதம் 08 ஆம் திகதி.

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
ஊர்காவற்றுறை.

(cr.41480) (N.1)

# நினைவுத் தூபியை சீரமைக்க கோரிக்கை

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கொல்லப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி சீரமைக்கப்படவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நினைவுத் தூபி பராமரிப்பின்றிக் காணப்படுகின்றது. அத்துடன் மழைகாலத்தில் நினை வாலயப் பகுதியைச் சூழ வெள்ளம் சூழ்ந்து தூபியின் கீழ்பகுதி சேதமடைகிறது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-17)

# 31க்கு முன்னர் ஆதனவரியை செலுத்துக

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்துக்குட்பட்ட மக்கள் தங்கள் ஆதன வரியை (சோலை வரியை) எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும் என்று உரும்பிராய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஆதனவரி செலுத்துபவர்களுக்குச் சோலைவரிக் கட்டணத்திலிருந்து பத்துவீதக் கழிவு வழங்கப்படும். அனைவரும் ஆதன வரியைச் செலுத்திச் சபையின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-66)

## தினம் தெரியுமோ?

ஒரு பிள்ளை பாட்டுப் போட்டியில் வெண்டதும் காணும், அதால படுகிறபாடும் காணும் எண்டளவுக்கு கில்மிஷாவின்ர நிலைமை மாறியிருக்குது. அந்தப் பிள்ளைக்கு இப்ப அரசியலைப் பற்றியோ இல்லாட்டி போராட்டத்தைப் பற்றியோ பிரிச்சு அறியிற வயசில்லை. அந்தப் பிள்ளைக்குத் தெரிஞ்சதெல்லாம் நல்லாப் பாடுறது மட்டும் தான். இஞ்ச பழம் திண்டு கொட்டைபோட்டவையே இன்னும் அரசியலில தள்ளாடிக்கொண்டிருக்கேக்க, ஒரு பள்ளிக்கூடப் பிள்ளையை அரசியலின்ர பேரால நக்கலடிக்கிறதும், கேவலப்படுத்துறதும் சரியில்லாதவேலை. அந்தப் பிள்ளைக்கு 'கண்டா வரச்சொல்லுங்க' பாட்டுப் படிக்கேக்க தன்ர மாமாவின்ர நினைவு வந்ததுக்காக, 'அப்ப அப்பிடிப் படிச்சுப்போட்டு இப்ப எப்பிடி ரணிலோட படம் எடுக்கலாம்?' எண்டு பேஸ்புக் முழுக்க ஒரே வயித்தெரிச்சல் பதிவாத்தான் கிடக்குது.

ஒரு நாட்டின்ர ஜனாதிபதி அந்தப் பிள்ளையைக் கூப்பிட்டுப் பாராட்டேக்க, அந்தப் பிள்ளைக்கு அவரோட சேர்ந்து படம் எடுக்கிற ஆசை இயல்பா வரும். அது அந்த வயசின்ர இயல்பு. தமிழ்த் தேசியத்துக்காக வெட்டி முறிஞ்சனாங்கள் எண்டு கதைவிடுறவையே, ரணிலோட கூனிக்குறுகி நிண்டு படமெடுக்கேக்க, அந்தப் பிள்ளை செல்பி எடுத்ததால ஏதோ தமிழ்த் தேசியத்தின்ர மானத்தையே வாங்கினமாதிரி ஒரு கூட்டம் ஒப்பாரி வைச்சுக்கொண்டு திரியுது. அப்பிடி ஒப்பாரி வைக்கிறவை ஆரெண்டு பார்த்தால், முக்கால்வாசிப் பேர் முன்னணிக் காரர். உந்தச் சைக்கிள் கட்சிக்காரர்தான் தங்கட கட்சி வழக்கப்படி கில்மிஷாவுக்கு துரோகிப் பட்டத்தை பேஸ்புக்கில குடுத்த ஆக்கள்.

ஒரு சின்னப்பிள்ளையில, அதுவும் இந்திய ரீவி ஒண்டில பாட்டுப்போட்டியில வெண்டுவந்த பிள்ளையில முன்னணிக்காரருக்கு ஏன் திடீர் கடுப்பு? அதுக்குக்காரணம் இருக்கு கண்டியளோ. கில்மிஷாவின்ர அப்பா, மணிவண்ணன் அணியில மான் சின்னத்தில பிரதேசசபை எலக்சன்ல நிக்கிறார். மணிவண்ணனுக்கும் முன்னணிக்கும் எட்டாப்பொருத்தம். மணிவண்ணனின்ர கன்னையில இருக்கிறவரின்ர பிள்ளை எண்டதாலதான், கில்மிஷாவில இப்பிடி வன்மக் 'குடோனை' முன்னணிக்காரர் கவிட்டுக் கொட்டுகினமாம். தங்கட அரசியல் காழ்ப்பை இப்பிடி ஒரு சின்னப்பிள்ளையில காட்டுறவை, எப்பிடி ஒட்டுமொத்த தமிழருக்கும் உரிமையை வாங்கிக் குடுப்பினமெண்டு நம்பிறது? உண்மையில பக்குவப்பட வேண்டியது கில்மிஷா இல்லை, உந்த வன்மக் குடோன்கள் தான்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2024

## தனுசு

சேமித்து வைப்பதில் தேனீக்களைப்போலவும், செலவழிப்பதில் ஒட்டகத்தைப் போலவும் குணம் கொண்ட நீங்கள், சரியெனப் பட்டதையே செய்வீர்கள். சகதியில் கல்லை விட்டெறிந்தால் அது தன் மேலேதான் தெறிக்கும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் நீங்கள்.

உங்கள் ராசிக்கு 9வது ராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் முடங்கியிருந்த நீங்கள், விஸ்வரூபம் எடுப்பீர்கள். எதிர்பார்த்து காத்திருந்த தொகை கைக்கு வரும். எந்தக் காரியத்தைத் தொட்டாலும் ஆரம்பம் நன்றாக இருந்தது, ஆனால் முடிவுகள் மோசமாக இருந்ததே என்று வருந்திய நிலை மாறும். பிள்ளைகளால் கவலைகளும், செலவுகளும் வந்த நிலை மாறி, இனி அவர்களால் மரியாதை கூடும். குருபகவான் உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் நினைத்த காரியம் நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வரும். வீடு, மனை வாங்குவீர்கள். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும்.

பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும். அவர்களின் சாதனைகள் மிகவும் உயர்வாகப் பேசப்படும். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பால், பூர்வீக சொத்துப் பிரச்சினைக்கு முடிவு வரும். அக்கம் பக்கத்தினரிடம் அளவாகப் பேசிப் பழகவும். குடும்பப் பிரச்சினைகளை அடுத்தவர்களிடம் கூறுவதை நிறுத்தினால் நன்மை உண்டாகும். கர்ப்பிணிகள் அதிக பாரம் சுமக்கக் கூடாது. வாகன ஓட்டிகள் அதிக எச்சரிக்கையுடன் வாகனத்தில் செல்ல வேண்டும். சாலையைக் கடக்கும்போது அலைபேசியில் பேசிக் கொண்டும், பாட்டுக் கேட்டுக் கொண்டும் செல்வதைத் தவிர்க்க வேண்டும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் இறங்கலாம். புதிய படிப்புப் படிப்பதிலும் ஆர்வம் வரும்.

குருபகவான் 1.5.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 6ம் வீட்டில் சென்று மறைவதால் வீண் பதற்றம், விரயம், ஏமாற்றம், மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். கணவன் மனைவிக்குள் சந்தேகம், விவாதங்கள் வந்து போகும். பணத் தட்டுப்பாட்டை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உறவினர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் வழக்கறிஞரை மாற்றுவீர்கள். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள்.

இந்த ஆண்டு முழுக்க ராகு 4ம் வீட்டிலும், 10ம் வீட்டில் கேதுவும் அமர்கிறார்கள். 4ம் வீட்டில் ராகு அமர்வதால் தாயாருக்கு நெஞ்சு வலி, சர்க்கரை நோய் வரக்கூடும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். வீடு வாங்கும் போது சொத்துக்குரிய தாய்பத்திரத்தை கேட்டு வாங்குங்கள். 10ல் கேது அமர்வதால் வேலைச்சுமை, வீண் பழி வந்துசெல்லும். சில காரியங்களை போராடி முடிக்க வேண்டி வரும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும்.

சனிபகவான் இந்த வருடம் உங்கள் ராசிக்கு 3வது வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் சவாலான காரியங்களையும் சாதாரணமாக முடிப்பீர்கள். அனுபவ அறிவைப் பயன்படுத்தி சில பிரச்சினைகளுக்கு எதார்த்தமான தீர்வு காண்பீர்கள். வேற்றுமதத்தினர் உதவுவார்கள். வழக்கால் பணம் வரும். எதிர்பார்த்த விலைக்கு பழைய சொத்தை விற்பீர்கள்.

**வியாபாரிகளே!** மார்ச், மே மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். நவம்பர், டிசெம்பர் மாதங்களில் லாபம் இரட்டிப்பாகும். சொந்த இடத்துக்கு கடையை மாற்றுவீர்கள். போட்டியாளர்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அதிரடியாக செயற்படுவீர்கள். தள்ளிப் போன வியாபார வாய்ப்புகள் மீண்டும் கிடைக்கும்.

**உத்தியோகஸ்தர்களே!** அதிகாரிகளால் பந்தாடப்பட்ட நிலை மாறும். செல்வாக்கு இருந்தும் நீங்கள் விரும்பிய இடம் மாற்றம் கிடைக்காமல் திண்டாடிய நிலை இனி மாறும். மே, டிசெம்பர் மாதங்களில் புதுச் சலுகைகள், சம்பள உயர்வு உண்டு.

**இந்த புத்தாண்டு உங்களின் குறிக்கோள்களை நிறைவேற்று வதாகவும், வசதி, வாய்ப்புகளையும்**

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விடயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். சங்கடங்கள் நீங்கும். சக வியாபாரிகளிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும்.

**கடகம்:** திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அவப்பெயர் நீங்கும். நண்பர்களை தொடர்பு கொண்டு பேசுவீர்கள். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும். முக்கியமான முடிவுகள் சாதகமாகும்,வியாபாரத்தில் மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**மகரம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# 'நஞ்சாகும் நிலம்' நூல் வெளியீடு

கிளிநொச்சி, ஜன. 9

ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வனின் 'நஞ்சாகும் நிலம்' நூல் வெளியீடு கிளிநொச்சியில் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வண.பிதா ரி.எஸ்.யோசுவா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நிகழ்த்தவுள்ளார்.

நூல் அறிமுகவுரையை கவிஞர்.சி.கருணாகரன், நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பேராசிரியர் எஸ்.ரகுராம், சூழலியல் அரசியல் உரையை ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ச-13)




# டெங்குத் தடுப்பு வார பணி கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜன.9

சுகாதார அமைச்சின் பணிப்புரையின் கீழான விசேட டெங்குத் தடுப்பு வார சிரமதானப் பணி கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம்முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலிருந்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை வரை நேற்று முன்தினம் டெங்கு சிரமதானப் பணிகள் இடம் பெற்றன.

டெங்குத் தடுப்பு சிரமதானப் பணிகளில் கரைச்சிப் பிரதேச செயலகத்தினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர், வர்த்தக சங்கத்தினர் பொது மக்கள் இணைந்திருந்தனர். (ச-113)

# திக்கம் பகுதியில் டெங்குக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 9

வடமராட்சி - திக்கம் பகுதியில் பருத்தித்துறைப் பொலிஸாரின் ஏற்பாட்டில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிமனையுடன் இணைந்து, பொலிஸார் மற்றும் கடற்படையினரும் இந்த டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ம-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குரல்வளையில் இருமுனைக் கத்தி

வடக்கு மக்களிடையே நிலவும் சாதியப் பாகுபாடுகள் குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. யாழ். சிவில் சமூக நிலையத்தின் தலைவர் என்று தன்னை அடையாளப்படுத்தும் நபரொருவர் ஜனாதிபதியைச் சந்தித்து வடக்கில் சாதியப் பிரச்சினைகள் உள்ளன என்றும் இந்தச் சாதியப்பாகுபாட்டால் பலர் பெரும் இன்னல்களை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டிய நிலையிலேயே, சாதியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளவுள்ளதாக ரணில் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் சாதியப்பாகுபாடுகள் இல்லை என்று சொல்லுவதற்கில்லை. இருக்கவே செய்கின்றன. வடக்கில் மட்டுமல்ல இது உலகளாவிய பொதுப் பிரச்சினை. உலகளாவிய பொதுப்பிரச்சினை என்று குறிப்பிடுவதன் பொருள் இது தீர்க்கப்படாதிருக்க வேண்டும் என்பதல்ல. மாறாக வடக்கைக் குறிப்பிட்டுப் பேசுபொருளாக்கும் அளவுக்கு இது இப்போது வலிதான விவகாரமாக இல்லை என்பதே.

சாதியம் என்பது இருமுனைக் கத்தி. அந்தக் கத்தியை ஒரு குழந்தையின் கைகளில் கொடுப்பது எவ்வளவு ஆபத்தானதோ, அதைவிட ஆபத்தானது சாதியம் தொடர்பான பேசுபொருள்களை பொருத்தமற்ற தருணங்களில் ஆரம்பிப்பது. யாழ்ப்பாணத்திலும் சரி அல்லது வடக்கு மாகாணத்திலும் சரி கடந்த 30 வருடங்களுக்கு முன்பிருந்த சாதிய ஒடுக்குமுறை நிலைமை இன்றில்லை. இப்போதைய இளைஞர்கள், யுவதிகள் பலர் சாதியப் பாகுபாட்டைத் தூக்கி தொலைதூரம் எறிந்துவிட்டுப் பயணப்பட ஆரம்பித்துவிட்டனர். வருவாயில் ஏற்பட்ட சமநிலைத்தன்மை, 'கற்றறிந்த சமூகம்' என்ற கோடு காட்டல் ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தை மையப் படுத்தியதாக இல்லாமல் விரிவாக்கம் அடைகின்றமை, உலகமயமாதலால் உண்டான மாற்றங்கள், புலம்பெயர் பயணங்கள் என்பனவும் சாதியம் சிதைக்கப்படவும், வர்க்க வேறுபாடுகள் களையப்படவும் இன்று காரணமாக இருக்கின்றன. இதேநிலை தொடர்ந்தால் அடுத்த ஒரு தசாப்தத்தில் சாதியம் என்பது பேசுவதற்கு அரிய விடயமாக அல்லது பேசுபொருள் இல்லாத விடயமாக மாறிவிடும். ஆக,சாதியம் என்பது அதனைத் தூக்கி வைத்துப் பேசாமல் விடுவதனூடாக மெல்லமெல்ல சமாதி கட்டிவிடக்கூடியதொன்றே. இவ்வாறான சாதக மாற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், தற்போது ஒரு ஜனாதிபதியிடம் அதைக் குறிப்பிட்டுக் கூறி கவனமீர்ப்பது என்பது திரை மறைவில் முன்னெடுக்கப்பட்டுவரும் மிகப்பெரும் சூழ்ச்சியின் வெளிப்பாடே.

ஓர் அரசியல் நகர்வு அல்லது திட்டம் வெற்றிபெற வேண்டுமாயின், பிரித்தாளும் தந்திரம் தவிர்க்கப்பட முடியாத காலமாக இக்காலம் அமைந்திருக்கின்றது. ஆதலால் தமிழினத்தை சாதியாலும், சமயத்தாலும் பிரித்து - தமிழர்களை நலிவடையச் செய்வது, தமிழ்த் தேசியத்தைச் சிதைத்து அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் பேரினவாதப் பூதத்தின் பெருவிருப்பு. அந்தப் பெருவிருப்பத்தை கனகச்சிதமாக இம்மியும் பிசகாமல் நிறைவேற்றிக் கொடுக்கத்தான், பேரினவாதத்துக்கு வாலாட்டும் சில விஷச்செடிகள் முழுவீச்சில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உண்மையில் நெருஞ்சி முள்ளாக இப்போது தைக்கும் பிரச்சினை சாதியமல்ல, இதுபோன்று தமிழினத்தின் உரிமைப் பிரச்சினையை சாதியப் பிரச்சினையாக மடைமாற்றுவது பிரகிருதிகளே. அந்தப் பிரகிருதிகளை, விஷச்செடிகளை இனங்கண்டு, களைந்து, தமிழர்களாக ஒன்றிணைந்து தேசியத்தைப் பலப்படுத்தவேண்டியது காலத்தின் தேவை.




## அடுத்தவாரம் மதிப்பீட்டுக்காக இலங்கை வருகின்றது ஐ.எம்.எப்.

**கொழும்பு, ஜன.9**

**சமகாலப் பொருளாதார நிலைவரம் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக சர்வதேச நாணயநிதிய அதிகாரிகள் அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளனர்.**

சர்வதேச நாணயநிதியத்தால் பரிந்துரைக்கப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புகளின் அடைவுகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக இந்தக் குழு மதிப்பீடு செய்யும் என்றும், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பாக ஆய்வு செய்யும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணயநிதியம் இலங்கை தொடர்பான இரண்டாம் கட்ட மதிப்பீட்டை இந்த ஆண்டின் முதல் அரையாண்டுக்குள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், சர்வதேச நாணயநிதிய அதிகாரிகள் குழுவின் வருகை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

(எ-இ)

## 8 லட்சம் மின்னிணைப்பு துண்டிப்பு!

கொழும்பு, ஜன.9

மின் கட்டணம் செலுத்தாமையால் கடந்த 3 காலாண்டுகளில் 8 லட்சம் பேரின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-இ)

## உடன்படிக்கையை வலியுறுத்தும் ஜப்பான்

இலங்கைக்கும், அதற்கு கடன் வழங்கிய நாடுகளுக்கும் இடையில் விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாக வேண்டும் என ஜப்பான் வலியுறுத்தியுள்ளது. உத்தியோகபூர்வ கடனாளர் குழுவுக்கு வெளியே உள்ள கடன்வழங்குநர்களுடனான ஒப்பந்தங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் ஒப்பீட்டுத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் ஜப்பான் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

## தரமற்ற மருந்துகள்

2023ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளில் கிட்டத்தட்ட 70 வீதமான மருந்துகள் தரமற்றவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் ஆனந்த விஜயவிக்கிரம இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான மருந்துகள் தரமற்றவையாகக் காணப்படுகின்றன.

மூன்று விதமான மருந்துகளை நாம் பரிசோதனை செய்ய முடியும். தொகுதிச் சோதனை, பதிவுச் சான்றிதழ், மருத்துவமனைகளில் செய்யப்படும் எழுந்தமான சோதனை என்பனவே அவையாகும். இலங்கையில் துரதிஷ்டவசமாக இப்போது மூன்றாவது வகைச் சோதனைகளைத்தான் செய்துகொண்டிருக்கின்றோம் - என்றார். (ம-6)

## நாட்டில் அதிகரிக்கும் குழந்தையின்மை

கொழும்பு, ஜன.9

இலங்கையில் புதிதாகத் திருமணம் செய்த தம்பதிகளிடையே குழந்தையின்மை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் திருமணம் செய்யாது சேர்ந்து வாழ்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கையின்படி 2012ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் ஒரு இலட்சத்துக்கும் குறைவான குழந்தை பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2013ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டு நாட்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு வீதம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

(எ-இ)

### நாளை

10.01.2024
**புதன்கிழமை**
**மார்கழி 25**
சுபநேரம் : 05.03 - 06.33
ராகுகாலம் : 12.33 - 02.03

### நாளொரு நல்வார்த்தை

**ஒரு நல்ல தலைவர் பல நல்ல தலைவர்களை உருவாக்க வேண்டும். அதிக பின்தொடர்பவர்களை மட்டுமே கொண்டிருக்கக்கூடாது.**

**- ரால்ப் நாடர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கு நியாயவிலை விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.9

**நெல்லுக்கான உத்தரவாத விலையை விரைவாக பெற்றுத் தர வேண்டும் என கிளிநொச்சி மாவட்டச் செயலரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

தைப்பொங்கல் கழித்து காலபோக நெற்செய்கை அறுவடை தொடங்க உள்ள நிலையில் நெல்லுக்கான நியாயவிலை கிடைக்க வேண்டும். தற்போது உற்பத்திகான செலவு அதிகரித்துள்ளது.

அதேபோன்று அறுவடைக்கான எரிபொருள் விலையும் அதிகரித்துள்ளது. அறுவடைக் கூலி, மருந்துகளின் விலைகள் என்பன கூடுதலாக உள்ளன.

இந்த நிலையில் மாவட்டச் செயலகம் அறுவடை தொடங்கும் முன்னரே நெல்லுக்கான நியாயவிலையினை பெற்றுத் தருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

உற்பத்திச்செலவு கூடுதலாகவும் நெல் விற்பனையின் போது குறைந்த விலையிலும் விற்பனை செய்கின்ற நிலைமைகள் இவ்வாண்டு மாற வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் இம் முறை 70 ஆயிரம் ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-13)



யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/82 வெள்ளாந்தெரு கிராம அலுவலர் பிரிவிலுள்ள பொருளாதாரம் நலிவுற்ற மக்களுக்கு கனடாவைச் சேர்ந்த மெற்றோலான் மீடியா பிரபாகரன் துரிதாவின் நிதிப்பங்களிப்பில் பொங்கல் பானைகள் கையளிக்கப்பட்டன. அவற்றை வடக்குக்கான பொறுப்பாளர் தேசபந்து லயன் கலாநிதி.நா.தனேந்திரன் வழங்கிவைத்தார். (ச)

# சாதனைமகன் புசாந்தன் சிறீதரன் எம்.பி. பாராட்டு



கிளிநொச்சி, ஜன.9

சர்வதேச மற்றும் தேசிய ரீதியான பளுதூக்கல் போட்டிகளில் அபார சாதனைகளை நிலைநாட்டிய தென்மராட்சியைச் சேர்ந்த ச.புசாந்தனை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேரில் சென்று பாராட்டியுள்ளார்.

அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற ஆசிய கிளாசிக் 'பவர்லிஃப்டிங் சம்பியன் ஷிப்' பளுதூக்கல் போட்டியில் இரண்டு வெள்ளிப்பதக்கங்களை புசாந்தன் தனதாக்கினார். அத்துடன் அண்மையில் இடம் பெற்ற தேசியரீ தியிலான பளுதூக்கல் போட்டியில் மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளிலும் 3 தங்கப் பதக்கங்களை வென்றார். (ச-100)



## பொதுச்சபைக்கூட்டம்

சாவகச்சேரி ஜன. 9

கொடிகாமம் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் பொதுச் சபைக்கூட்டம் கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக சாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கொடிகாமம் சமுர்த்தி முகாமையாளர் தலைமையில நடைபெற்ற கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றன. (ரி-9)



நீதியமைச்சால் வெங்கலசெட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பமொன்றுக்கு சுய தொழில் முயற்சிக்காக தையல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. இதனைப் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் வழங்கினார். (ச-75)

## ஆப்கனில் ஒழுங்கற்ற ஹிகாப் அணிவோர் கைது!

காபூல், ஜன. 9

ஆப்கானிஸ்தானில் ஒழுங்கான முறையில் ஹிகாப் அணியாத பெண்களைக் கைதுசெய்து சிறையில் அடைத்து வருகின்றனர் தலிபான்கள்.

தலிபான் பேச்சாளர் ஒருவர் இது குறித்துத் தெரிவிக்கையில்,

பெண்கள் ஒழுங்காக ஹிகாப் அணிவதில்லையென முறைப்பாடுகள் கிடைத்தன.

இதனையடுத்து பெண் பொலிஸார் மூலம் பிழையான முறையில் ஹிகாப் அணிந்து கொண்டு பொது இடங்களில் நடமாடும் பெண்கள் கைதுசெய்யப்படுகின்றனர். அவர்களை எச்சரித்து பிணையில் விடுதலை செய்வோம் - என்றார். (ச-6)



# வேரவில் வீதி சீரின்மையால் அம்புலன்ஸ் சேவை பாதிப்பு

## கிளி. சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 9

கிளிநொச்சி பல்லவராயன்கட்டுச் சந்தியிலிருந்து வேரவில் பிரதேச மருத்துவமனை வரையான வீதி சீரின்மையால் நோயாளர்களுடன் அம்புலன்ஸ் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ரி.[illegible] தெரிவித்தார்.

வேரவில் மருத்துவமனைக்கு ஒரு அம்புலன்ஸ் சேவையே இடம்பெறுகிறது. பல்லவராயன்கட்டுச் சந்தியிலிருந்து வேரவில் வரையான வீதியில் பெரும் குழிகள் நிறைந்து சீரின்றிக் காணப்படுகிறது.

கடந்த பெருமழையின்போது மருத்துவமனைக்கு நோயாளர்கள் உழவியந்திரம் மூலமே அழைத்து வரப்பட்டனர். இந்த வீதியை புனரமைப்பதன் மூலமே பிரதேச மருத்துவமனைக்கான அம்புலன்ஸ் சேவையை நடத்தமுடியும். அத்துடன் வேரவிலிலிருந்து நோயாளர்களை முழங்காவில், கிளிநொச்சி மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் களத்தில் தம்மரதன தேரர்!

நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு தொலைநோக்குப் பார்வை இல்லை. எதிர்காலத்தில் ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே அரசமைப்பின் கீழ் நாட்டை நடத்தத் தயாராக உள்ளோம் என மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:– நாட்டின் நலன் கருதி ஜனாதிபதித் தேர்தலுக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்கும் நாங்கள் தயாராக உள்ளோம்.

இலங்கை முழுவதிலுமுள்ள பல்வேறு துறைசார்ந்தவர்களை இணைத்து ஒரே அரசியல் கட்சியில் மற்றும் ஒரு சின்னத்தில் போட்டியிட வைக்கும் முனைப்பில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். நாங்கள் புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்யவில்லை. எனக்காக தியாகம் செய்ய பல அரசியல் கட்சிகள் உள்ளன.

தண்ணீர், மின்சாரம், வரி என அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எங்களிடம் தீர்வு உள்ளது. திமிர்பிடித்த ஆட்சியாளர்களை இனியும் தொடர அனுமதிக்க முடியாது. அவர்கள் அனைவரும் சிறையில் இருக்கவேண்டும் அல்லது வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும்.

2 ஆயிரத்து 332 வருடங்களுக்கு முன்னர் மிஹிந்தலையில் இருந்து தேசத்தைக் கட்டியெழுப்பும் பாதை ஆரம்பிக்கப்பட்டது போல் மிஹிந்தலையில் இருந்து மீண்டும் அந்தப் பயணம் ஆரம்பிக்கப்படவேண்டும் – என்றார். (எ–இ)

## ரஷ்ய சுற்றுலாவி விபத்தில் பலி!

ரஷ்ய உல்லாசப்பயணி ஒருவர் இலங்கையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுற்றுலாவிகள் பயணம்செய்த பேருந்தும் லொறி ஒன்றும் விபத்துக்குள்ளானதிலேயே இந்த இறப்பு சம்பவித்துள்ளது. அதுலின் இல்டர் (வயது-42) என்ற ரஷ்யப் பிரஜையே உயிரிழந்தவராவார். (ம-6)


## விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால், கூட்டுறவு ஊழியர் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதற்கான விசாரணை உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் கூட்டுறவு ஊழியர் தாபன விதிக்கோவை 5.4.14 இற்கு அமைய தெரிவு செய்யப்படுவார். மேலதிக விபரங்களை WWW.np.gov.lk என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடமுடியும். விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதி 2024.02.06

(விண்ணப்ப படிவத்தினை எமது அலுவலகத்திலோ அல்லது இணையத்தளத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ள முடியும்)

**பா. அபிராமி,**
**செயலாளர்,**
**கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.**

(cr.41476) (N-1)

## வேலை வெற்றிடம்

எமது பாடசாலையில் பின்வரும் பாடங்கள் கற்பிப்பதற்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம். உங்கள் விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் நேர்காணலுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்

01. ICT - (Graduate)
02. English Language - (Graduate)
03. Western Music and Band

**முகவரி : அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில், சுன்னாகம்.**
**காலம் : 18.01.2024 ற்கு முன்னர்**

(cr.41477) (N.1) **அதிபர்**

## நீங்கா நினைவில்

27 ஆம் ஆண்டு நினைவலைகள் — 37 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 09.12.1937
மறைவு 07.01.1997



டாக்கர்
**பொன். மகாலிங்கம்**

தோற்றம் 26.11.1968
மறைவு 31.05.1987



**அமரர் மகாலிங்கம் அச்சுதன்**

எமது குடும்பத்தின் உயிர்நாடிகளே !
உங்களை இழந்து ஆண்டுகள் பல கடந்து விட்டது
துயரும் வலிகளும் எம்மோடு தொடர்ந்தபடி
நிரப்ப முடியாத இடைவெளிகளாய்
உமைச் சூழ இருந்த உறவுகளை
அன்போடு அணைத்து வைத்திருந்தவர்கள்
அதனால் இன்றும் எல்லோர் மனதிலும்
உயிர்ப்போடு உலா வருகிறீர்கள்
கனத்த மனதுடன் எமது நினைவஞ்சலிகள்...

"அறந்தாங்கி"
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

உங்கள் நினைவுகளுடன்
ம.இராஜேஸ்வரி - மனைவி, அம்மா,
ம.புதுமைலோலன் (சுதா) மகன், சகோதரன்.
(சுவிஸ்லாந்து)

(cs.53453) (N.1)

## கூறுவிலை கோரல்

2024 ஆம் ஆண்டின் பண்டிகைக் காலங்களில் வீரசிங்கம் மண்டபத்தில் விற்பனை நடவடிக்கையை மேம்படுத்த விரும்பும் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பப் படிவத்தை அலுவலக நேரத்தில் ரூபா.50.00 செலுத்தி சபையில் பெற்று 24.01.2024 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களை பதிவுசெய்தல் - 2024
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை

29.11.2023ம் திகதிய உதயன் மற்றும் தினக்குரல் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட மேற்படி அறிவித்தல் 2024.01.18ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

சு.சுதர்ஜன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
09.01.2024

(cr.41478) (N-1)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
## மீள் சுழற்சிக்குரிய கழிவுப் பொருட்கள் விற்பனை
## கேள்வி கோரல்

எமது கல்லுண்டாய் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ பிரிவில் பின்வரும் விபரப்படியான மீள் சுழற்சிக்குரிய கழிவுப்பொருட்கள் காணப்படுகின்றன. இவற்றை பெற்றுக் கொள்ள ஆர்வமுடையவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதித்திகதி : 23.01.2024 பி.ப 3.00 மணி
கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி : 24.01.2024 மு.ப 10.30 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 24.01.2024 மு.ப. 10.30 மணி

கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 225 6616 என்ற தொலைபேசி ஊடாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.

| இல | விற்பனைக்குரிய பொருட்களின் விபரம் | | |
|---|---|---|---|
| 01 | சிரட்டை | 06 | பிளாஸ்ரிக் வெற்றுப் போத்தல்கள் |
| 02 | கண்ணாடி போத்தல்கள் (நிறம்) | 07 | பியர் ரின் |
| 03 | கண்ணாடிப் போத்தல்கள் (வெள்ளை) | 08 | காட்போட் மட்டைகள் |
| 04 | தகரம் | 09 | இரும்பு பொருட்கள் |
| 05 | பிளாஸ்ரிக் கான்கள் | 10 | பிளாஸ்ரிக் வெற்றுப்போத்தல் மூடிகள் |

சீ.சபேசன்
செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்
09.01.2024

## 100 ஆவது ஜனன தினம்

மலர்வு 09.01.1924
உதிர்வு 21.12.2005



**சீனிவாசகம் பரமேஸ்வரன்**

நூறாவது அகவை தனில்
எம்மை விட்டு நீருமோ விண்ணுலகில்
மண்ணுலகில் உம்மை வாழ்த்துகின்றோம்
இனிய உம் நினைவுகளுடன்.

மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
T.P.:- 077 922 8872

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
மற்றும் பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று
இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு

### அமரர் சண்முகம் சரஸ்வதி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 4.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'குமரபதி'
ஊரெல்லை வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

குடும்பத்தினர்.
077 634 1360

(CR 41482) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 12 . 1948



இறப்பு 04 . 01 . 2024

### இராஜேந்திரம் மகேஸ்வரன்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் மகேஸ்வரன் கடந்த (04.01.2024) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம் சண்முகபூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் விசாலாட்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சௌபாக்கியகௌரியின் அன்புக் கணவரும், சுபணாவின் அன்புத் தந்தையாரும், யோகேந்திரனின் அன்பு மாமனாரும், ஷாரணி, சங்கவி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், காலஞ்சென்றவர்களான கௌரி, குலேந்திரன் மற்றும் நரேந்திரன், கௌசலா, பிறேமா, நிர்மலா, ரவீந்திரன், சர்வேந்திரன், பாலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2024) புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் E'Sons Funeral Services, 148, Main Street, Jaffna வில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 307 4260

(cs 53449) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



மலர்வு 07.06.1967
உதிர்வு 08.01.2024

### Dr.அனுசாந்தினி கந்தையா

சாவகச்சேரி வடக்கு ஐயா கடையடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட Dr.அனுசாந்தினி கந்தையா அவர்கள் நேற்று (08.01.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், அபிராமி, பொன்னையா, பொன்னம்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தவமணி ஆகியோரின் அன்புப் புதல்வியும், Dr.அனுசியா (அமெரிக்கா), அனுராதா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயரவி (கனடா) இன் மைத்துனியும், சௌம்யா (கனடா), மதுஷான் (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சரவணமுத்து, தியாகராசா ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, பூமணிதேவி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2024) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
அனுசியா : 0019175890026
அனுராதா : 0015143341351

ஐயா கடையடி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

(CS 27610) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஒளிவிழா



யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்து பிறப்பின் ஒளிவிழா அண்மையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத் தலைவர் இ.சுரேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் கலந்துகொண்டார்.
இதன்போது கிறிஸ்து பிறப்பு வாழ்த்துச்செய்தி, கிறிஸ்மஸ் தாத்தாவின் ஆடல்பாடல், சிறார்களின் ஆடல்பாடல்கள் என்பன இடம்பெற்றன. (ச-27)

# மணிவிழாவும் பிரிவுபசாரமும்

யாழ்ப்பாணம், ஜன. 9
மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் ஆறு வருடங்களாக உபஅதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் சுப்பிரமணியம் கோடீஸ்வரனின் மணிவிழா அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் அதிபரும் தற்போது நாவற்குழி மகா வித்தியாலயத்தின் அதிபருமாகிய சு.சிவானந்தன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-159)



உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஒளிவிழா அண்மையில் வித்தியாலய முதல்வர் க.பிரதாபன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் மிருசுவில் பங்குத்தந்தை அருட்தந்தை ஏ.லோரன்ஸ் பிரதம விருந்தினராகவும், ஓய்வுநிலை அதிபர் க.சண்முகதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ரி-159)



# வெள்ளத்தால் பாதிப்பு: சந்நிதியான் உதவிக்கரம்

முல்லைத்தீவு, ஜன. 9
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் வெள்ளஇடரால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் அண்மையில் கையளிக்கப்பட்டன.
சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் இணைந்து நேரடியாகச் சென்று இந்த உதவிகளை வழங்கி வைத்தார். (ச-66)



## பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி பிரதேசசபையின் மிருசுவில் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையில் சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் ஓய்வுநிலை செயலாளர் செ.சிவராஜசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட், மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை பகுதித் தலைவர் செல்வி இ.சரவணமுத்து ஆகியோர் பங்கேற்றனர். (ச-159)






யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் 'மார்கழி இசைவிழா' நடைபெற்று வரும் நிலையில் யாழ்.கலாசார மத்திய நிலைய வளாகத்தில் சிறுகைத்தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன. (ச-17)



# முயற்சியாண்மைப் போட்டி; வெற்றியாளருக்குப் பரிசு

கிளிநொச்சி, ஜன. 8
கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் முயற்சியாண்மை கருத்துக்களை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.
மாவட்டச் செயலக திறன்விருத்தி பயிற்சி நிலையத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் உதவிப்பணிப்பாளர் ச.சசீபன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் திருமதி நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில், மாணவர்களால் வரையப்பட்ட ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கில் முதலீடு; ஆட்சேபனையில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 9
வடக்கு - கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்ள முதலீட்டாளர்கள் அழைக்கப்பட்டால் அது நல்லது. அதில் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குப் பயணம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'நாட்டில் நல்லிணக்கம் அவசியம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழு நாட்டுக்கும்தான் ஜனாதிபதி. வடக்கு - கிழக்கு தொடர்பிலும் அவர் கவனம் செலுத்தித்தான் ஆகவேண்டும். ஆனால் அரசமைப்புக்கு அமையவே நிதி தொடர்பான நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும். முதலீட்டாளர்களை அழைத்துவந்து திட்டங்களை முன்னெடுத்தால் அது நல்லம். அதில்எமக்குஎவ்விதபிரச்சினையும் இல்லை. அதன் பலன் முழு நாட்டுக்கும் கிடைக்கும்' - என்றார். (அ-ஒ-44)

புதையல் ஸ்கானர் விற்பனை:

## மருத்துவர் உட்பட மூன்று பேர் கைது

வவுனியா, ஜன. 9
பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரிடம் புதையல் தேடுதலை முன்னெடுக்கும் ஸ்கானரை 15 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற மருத்துவர் உட்பட 3 பேரைக் கைது செய்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக நேற்று அதிகாலை பொலிஸாரின் விசேட புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் இணைந்து மூவரையும் கைது செய்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ-ஒ-18-110)



பருத்தித்துறை பிரதேசசபையால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் பங்கேற்றார். (ச-100)

அரசஊழியர்களுக்கு

## இந்த மாதமே ரூ. 5ஆயிரம்

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜன. 9
2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு வழங்க முன்மொழியப்பட்ட 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 5 ஆயிரம் ரூபாவை இந்த மாதம் முதல் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், மருத்துவர்களின் டி.ஏ.ரி. கொடுப்பனவை 35 ஆயிரம் ரூபாவிலிருந்து 70 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆய்வுக் கொடுப்பனவை 25 சதவீதத்தால் அதிகரித்து ஜனவரி மாத சம்பளத்துடன் வழங்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ-ஒ-இ)



தாயகம் அறக்கொடை நிறுவனத்தால், பொருண்மியம் நலிந்த மாணவர்களுக்கும் விழிப்புலனற்றோர் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கின்ற 150 குடும்பத்தினருக்கும் பல்வேறுபட்ட உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் வைத்து இந்த உதவிப்பொருள்கள் கையளிக்கப்பட்டன. (o)


## மரண அறிவித்தல்

### சண்முகம் பரமானந்தம்

(ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர், யாழ். போதனா வைத்தியசாலை)



பிறப்பு 13.05.1946 — இறப்பு 07.01.2024

நல்லூர் செட்டி தெருவை பிறப்பிடமாகவும் பண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற திரு.திருமதி சண்முகம் தம்பதியின் மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் விமலாம்பிகை தம்பதியரின் மருமகனும், திருமதி அழகராணியின் கணவரும், யசிவதனா, சுகி, சபேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜ்குமார், ரமணிகாந், நிரோஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வினோஜன், கஸ்தூரி ரக்ஷன், வாகீசன், புகழீசன், வைஷாலினி, கவிஷணன், திவிஷாலி, அபிலாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 7/2, புது வீதி, கொய்யாத்தோட்டத்தில் நிகழ்ந்து பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27615)A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 06 . 1961



மறைவு 07 . 01 . 2024

### செல்லையா மகேந்திரன்

குடமியன் வரணியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா மகேந்திரன் கடந்த (07.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் தவமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், கிருஸ்ணலீலாவின் அன்புக் கணவரும், சோபனா, நிரூபன், ஜனஜா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன், யுகிகா, அஜிந்தன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கானஜன், அபிஷன், அஸ்வின், அஜன் (இத்தாலி), அஜனிகா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும், துரைசிங்கம் தவமணி, ஜெகநாதன் தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் குடமியன் வரணியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

குடமியன், வரணி.
தொடர்புகளுக்கு:
ம.நிரூபன் (மகன்)- 0775993531

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 41484) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத் தமிழர் தலைநகரில்

# மிகப்பிரமாண்டமான பொங்கல் விழா

**1008 பொங்கல் பானைகள்**

**1500 பரத நாட்டிய கலைஞர்கள்**

**500 கோலங்கள்**







திருகோணமலை, ஜன. 9
இலங்கை வரலாற்றில் முதல்முறையாக ஆயிரத்து 8 பொங்கல் பானைகளுடன் பொங்கலும், ஆயிரத்து 500 பரத நாட்டிய கலைஞர்களுடன், 500 கோலங்களுடன் பொங்கலை வரவேற்கும் முகமாக மாபெரும் பொங்கல் விழா ஈழத் தமிழர்களின் தலைநகரான திருகோணமலை மக்கெய்சர் திறந்தவெளி விளையாட்டரங்கில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.
கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.
இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள் பங்குபற்றினர். நேற்றுமுன்தினம் அங்கு ஜல்லிக்கட்டு நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

### 84 கிலோ...

கொல்லி கேரளக்கஞ்சா நேற்று திங்கட்கிழமை விசேட அதிரடிப் படையால் மீட்கப்பட்டது. மீட்புச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படாத நிலையில் கைப்பற்றப்பட்ட பொருள்கள் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

### 48கிலோ...

வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மகிந்த குணரட்ன, யாழ். மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் மஞ்சுள செனரத், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்துக்கான புதிய பொலிஸ் அத்தியட்சகர் சந்தன கமகே மற்றும் காங்கேசன்துறை பிராந்தியம் இரண்டுக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இலங்கைக்கோன் ஆகியோரது வழிகாட்டுதலில், பருத்தித்துறை பொலிஸாரால் இந்தப் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.
வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடும் கடற்கரைப் பகுதிக்கு ஒரு படகில் வந்த மர்ம நபர்கள் பொதியொன்றை வீசிவிட்டுச் சென்றுள்ளனர். இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து அங்கு அவர்கள் விரைந்தனர். பொலிஸார் மறைவாக இருந்து கண்காணிப்பில் ஈடுபட்டனர். எனினும் நீண்டநேரமாகியும் பொதியை எடுத்துச் செல்வதற்கு எவரும் வராத நிலையில் பொலிஸார் அதனைக் கைப்பற்றி சோதனை செய்துள்ளனர்.
அந்தப் பொதியில் இருந்து தலா ஒவ்வொரு கிலோ நிறையுடைய 48 சிறு பொதிகளில் 48 கிலோ உயிர்கொல்லி அபின் மற்றும் தலா இரண்டு கிலோ நிறையுடைய 14 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த 28 கிலோ உயிர்கொல்லி கேரளக் கஞ்சா என்பன மீட்கப்பட்டன.
மத்திய போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் தரவுகளுக்கு அமைவாக கைப்பற்றப்பட்ட உயிர்கொல்லி அபின் போதைப் பொருள் ஒரு கிலோ ரூபா ஒரு கோடி 80 இலட்சம் என்ற அடிப்படையில் கைப்பற்றப்பட்ட மொத்த அபின் போதைப் பொருளின் பெறுமதி ரூபா 86 கோடி 40 இலட்சம் எனவும், கேரளக்கஞ்சாவின் பெறுமதி ரூபா 44 இலட்சத்து 80 ஆயிரம் எனவும் பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பியந்த அமரசிங்க தெரிவித்தார்.
உயிர்கொல்லி அபின் போதைப்பொருள் இலங்கையில் பாவனையில் இல்லாத நிலையில் கடல்வழியாக இலங்கைக்குள் கொண்டுவந்து வேறு நாடுகளுக்கு அதனைக் கொண்டுசெல்லும் நோக்கிலேயே கடத்தி வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாகவும், இவ்வளவு பெருந்தொகை அபின் கைப்பற்றப்பட்டுள்ளமை வடக்கு மாகாண வரலாற்றில் இதுவே முதன்முறை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-100-26)

### நயினாதீவு...

எதிர்பார்த்துள்ளோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
வடக்குப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்பு திரும்பிய கையோடு, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு இளைஞர் பௌத்த சங்கத்தின் 125ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.
'போருடன் தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளுக்கும் 2025ஆம் ஆண்டாகும் போது தீர்வு வழங்க எதிர்பார்க்கிறோம். இடம்பெயர்ந்தோர் மற்றும் காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான அரசியல் தீர்வுகள் வழங்கப்படும்' என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
'நாகதீப விகாரையை மையமாகக் கொண்ட சமய நிலையத்தை மேலும் விரிவுபடுத்தவும், யாழ்ப்பாணத்தில் தனித்துவமான இந்து ஆலயத்தை நிறுவவும் எதிர்பார்க்கிறோம். நாம் ஒன்றுபட்டு முன்னேறுவோம். இது குறித்து இளைஞர்களுடன் கலந்துரையாட வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்ப அவர்களின் ஆலோசனைகள், திட்டங்கள், தேவை. நாம் நிகழ்காலத்தையன்றி எதிர்காலத்தைப் பற்றி நோக்கவேண்டும்' என்றும் அங்கு ஜனாதிபதி ரணில் குறிப்பிட்டார். (அ-ஒ-44)

### அராஜகத்தை...

எனக் கோரி முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளால் மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.
வவுனியாவில் ஜனாதிபதி வருகையின் போது கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கத் தலைவி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இந்த நிலையிலேயே, முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று மு.ப. 10.30 மணியளவில் முல்லைத்தீவு புனித இராயப்பர் தேவாலயத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டப் பேரணியானது முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக சென்று நிறைவு பெற்றிருந்தது. (அ-ஒ-19)

### பேரணியில்...

கழக மாணவர்களால் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட பேரணியில் கலந்துகொண்ட 7 பேருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கிலிருந்து பிரதிவாதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.
நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவாஜிலிங்கம் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது. ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஷ் மற்றும் புவனேந்திரம் பானுப்பிரியன் ஆகியோர் பிரதிவாதிகளுக்காக மன்றில் முன்னிலையாகினர். சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களைத் தொடர்ந்து, இந்த வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டும் என்று பொலிஸார் மன்றுரைத்தனர். இதையடுத்து வழக்கு கிடப்பிலிடப்பட்டு பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டனர். (அ-ம)

### அரசியல்...

நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர். அச்சுவேலியைச் சேர்ந்த கிராம அலுவலரான நாகலிங்கம் மதனசேகரம் (வயது-67) 12 ஆண்டுகள் சிறைத்தண்டனையை அனுபவித்து வந்த நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் ஒன்று தொடர்பில் விசாரணைக்காக 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டிருந்தார். இதன் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் மன்னிப்பில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
முல்லைத்தீவைச் சேர்ந்த செல்லத்துரை கிருபாகரனும் மிக நீண்டகாலமாக சிறைத்தண்டனை அனுபவித்து வந்த நிலையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-ஒ-23)

### 5 லட்சம்...

இலட்சம் பேர் மாத்திரமே வரி செலுத்தி வருவதால், மறைமுக வரியைக் குறைக்கவும், நேரடி வரியை அதிகரிக்கவும், வரி ஏய்ப்பு செய்யும் சுமார் 5 இலட்சம் பேரையும் வரி வலைக்குள் கொண்டு வரவேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.
அத்துடன் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து வரிக்கோப்பு இலக்கத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

### நாடாளுமன்று...

வடைந்த பின்னர் நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இடைநிறுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார். நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படும் நாளில் இருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத வகையில் புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாக வேண்டும். இதற்கமைய புதிய கூட்டத்தொடர் பெப்ரவரி முதல் வாரத்தில் ஆரம்பமாகும் எனத் தெரியவருகின்றது. (அ-ஒ-44)

### மின்தாக்கி...

கொண்டிருந்த வவுனியா, பூந்தோட்டத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் பவித்திரன் (வயது - 29) என்ற இளைஞரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். நேற்று மு.ப. 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (அ-ஒ-27-113)

### பாம்பு...

இலக்காகி உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் குடமியன், வரணியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்லையா மகேந்திரன் (வயது - 62) என்பவரே உயிரிழந்துள்ளார்.
சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்பின் பிரகாரம் தென்மராட்சி, கொடிகாமம் பிரிவு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலரின் இறப்பு விசாரணையையடுத்து, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியால் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ஒ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரணிலுக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

# வழக்கு கிடப்பிலிடப்பட்டு பிரதிவாதிகள் விடுதலை!

யாழ்ப்பாணம், ஜன. 9

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடம் தைப்பொங்கலுக்கு யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தபோது, அவருடைய வருகைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 11 பேருக்கு தொடரப்பட்ட வழக்கு கிடப்பில் போடப்பட்டு வழக்கிலிருந்து அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், வேலன் சுவாமிகள் உள்ளிட்ட 11 பேருக்கு எதிராக இந்த வழக்குத் தொடரப்பட்டது. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டது. ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஷ் மற்றும் புவனேந்திரம் பானுப்பிரியன் ஆகியோர் பிரதிவாதிகளுக்காக மன்றில் முன்னிலையாகினர். விசாரணையின்போது, 'வழக்குக்காக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட வேண்டும்' என்று பொலிஸார் மன்றுரைத்தனர். இதையடுத்து, வழக்கை கிடப்பில்போட்டு பிரதிவாதிகளை விடுவிக்கவேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரியதையடுத்து. அவர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு வழக்கு கிடப்பில் போடப்பட்டுபிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டனர். (அ-ம-66-125)


## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

(1). **வரவேற்பாளர்** (Receptionist) **பகல்/ இரவு**
(2). **சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்** (Marketing Staff)
(3). **பண வசூலிப்பாளர்** (Cash Collector)
(4). **கிராபிக் டிசைனர் - இரவு** (Graphic Designer)

போன்ற வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் இன்று (09.01.2024) செவ்வாய்க்கிழமை கீழ் காணும் முகவரிக்கு காலை 9.00-12.00 மணிவரை உங்களது சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

**உதயன்**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## பணியாள் தேவை

கணக்குப் பதியுனர். சிட்டை எழுதுனர் பெண். தகைமை - O/L
வேலை நேரம் :
திங்கள் முதல் சனி 8.30 - 5.30
தொடர்புகளுக்கு: **077 361 1041**

## மேசன் தொழிலாளர்கள் உப ஒப்பந்தகாரர்கள் தேவை

பிரபல கட்டுமான நிறுவனமான கதிர் இன்ஜினியரிங் கொன்ஸ்டரக்சன் நிறுவனத்திற்கு பருத்தித்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமான வேலைக்கு தகுதியான மேசன் தொழிலாளர்கள் உப ஒப்பந்தகாரர்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு: **077 2417 103**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு, டச்சு றோட் முகப்புடன் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. G.P.S விளையாட்டு அரங்கு வீதி முகப்புடனும், 20 அடிப் பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

தரகர் தேவையில்லை.

**பார்வையிடும் நேரம் :**
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 வரை

தொடர்பு: **077 4546 538**
**075 6385 684**

(CS 27614) A-1


# 31 ஆம் நாள் நினைவேந்தல்

மலர்வு 09 . 07 . 1951

உதிர்வு 12 . 12 . 2023



## அமரர் செபமாலை அழகக்கோன்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவையொட்டி நாளை (10.01.2024) புதன்கிழமை காலை 7.00 மணிக்கு கூமாங்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் அன்னாருக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் இளைப்பாற்றிற்காக செபிக்கவும்.

அவர் மேலுள்ள அன்புக்காகவும், நட்புக்காகவும் உங்களை அழைத்து நிற்கின்றோம்.

**சகோதரங்கள், மைத்துனர்கள், பிள்ளைகள்.**
**30/1, உக்குளாங்குளம், வவுனியா.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1955

மறைவு 08 . 01 . 2024



## மகாலிங்கம் சந்திரா

நல்லூர் அரசடியை பிறப்பிடமாகவும் முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சந்திரா அவர்கள் நேற்று (08.01.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பண்டாரி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், வாசுஜா, வினோஜன், வஸ்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும், துஸ்யந்தன் (டயஸ்), மதுஷன் ஆகியோரின் மாமியாரும், இந்திராவின் அன்புச் சகோதரியும், தேவராசாவின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான பவளம், தர்மலிங்கம், சின்னத்துரை மற்றும் சந்திரலிங்கம், சதிஸ்வரி, சசிரேகா, சாந்தினி, பொன்மணி, சந்திரமோகன், சுரேஸ்குமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2024) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
முடமாவடி. **077 610 1901, 077 356 5285**

(CS 53350) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org